

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 53 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 16 – வியாழக்கிழமை 02 அக்டோபர் 2025 – கோவை ★ ★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 53 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 16 - Thursday 02 October 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00


## தியாகராயர் நகரில் ஜெ.அன்பழகன் பெயரில் ரூ.164.92 கோடியில்

# சென்னையிலேயே மிக நீளமான மேம்பாலம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.9.2025) பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சென்னை, சி.ஐ.டி. நகர் பிரதான சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தியாகராய நகரில் தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சி.ஐ.டி. நகர் பிரதான சாலையை இணைக்கும் வகையில் 164.92 கோடி ரூபாய் செலவில் மேம்பாலம் கட்டப்பட்டு, மறைந்த தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் நினைவாக "ஜெ.அன்பழகன் மேம்பாலம்" என்று பெயர் சூட்டப்பட்டு திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**சென்னை, அக். 2 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.9.2025) பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சென்னை, சி.ஐ.டி. நகர் பிரதான சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தியாகராய நகரில் தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சி.ஐ.டி. நகர் பிரதான சாலையை இணைக்கும் வகையில் 164.92 கோடி ரூபாய் செலவில் மேம்பாலம் கட்டப்பட்டு, மறைந்த தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் நினைவாக "ஜெ. அன்பழகன் மேம்பாலம்" என்று பெயர் சூட்டப்பட்டு திறந்து வைத்தார்.**

பெருகிவரும் போக்குவரத்தினைக் கருத்தில் கொண்டு மக்கள் எளிதாகப் பயணம் செய்திடும் வகையில், கடந்த நான்கு ஆண்டுகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 300.16 கோடி ரூபாய் செலவில் 13 இடங்களில் புதிய பாலங்கள் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

### ஜெ.அன்பழகன் மேம்பாலம்!

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசினால் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் உயரிய தொழில்நுட்பத்துடன் தியாகராயநகர் தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சி.ஐ.டி. நகர் பிரதான சாலையை இணைக்கும் வகையில் 3,800 மெட்ரிக் டன் இரும்பினால் வடிவமைக்கப்பட்டு 164.92 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல் இரும்பு மேம்பாலம் "ஜெ.அன்பழகன் மேம்பாலம்" ஆகும்.

சி.ஐ.டி நகர் முதல் பிரதான சாலையிலுள்ள தெற்கு உஸ்மான் சாலை மேம்பாலத்தின் சாய்வுதளப் பகுதியிலிருந்து சி.ஐ.டி நகர் நான்காவது பிரதான சாலை சந்திப்பை இணைக்கும் வகையில் கட்டப்பட்டுள்ள இந்த மேம்பாலம் மூலம், தெற்கு உஸ்மான் சாலை பர்கிட் சாலை மேட்லி சாலை ஆகியவற்றின் சந்திப்பு, தெற்கு உஸ்மான் சாலை தென்மேற்கு போக் சாலை நியூ போக் சாலை ஆகியவற்றின் சந்திப்பு, தெற்கு உஸ்மான் சாலை சி.ஐ.டி. நகர் வடக்கு சாலை சந்திப்பு ஆகியவற்றில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் குறைந்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### உயரிய தொழில்நுட்பத்துடன் 1200 மீட்டர் நீளம், 8.40 மீட்டர் அகலம்!

இந்த புதிய மேம்பாலம், 1200 மீட்டர் நீளம் மற்றும் 8.40 மீட்டர் அகலத்தில் 53 இரும்பு தூண்களுடன் இருவழிப்பாதையாக அமைக்கப்பட்டு தெற்கு உஸ்மான் சாலையில் ஏற்கனவே உள்ள 800 மீட்டர் நீள கான்கிரீட் மேம்பாலத்துடன், உயரிய தொழில்நுட்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் இந்த மேம்பாலம் 2 கிலோ மீட்டர் நீளத்திலும் தியாகராய நகர் பேருந்து நிலையத்திலிருந்து இந்தப் பாலத்தில் ஏறுவதற்கு 120 மீட்டர் நீளத்திலும், தெற்கு உஸ்மான் சாலை பாலத்திலிருந்து தியாகராய நகர் பகுதிக்கு இறங்குவதற்கு 100 மீட்டர் நீளத்திலும் அணுகு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இதன் இருபுறமும் நடைபாதைகளுடன் 6 மீட்டர் அகல சேவை சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளது.

### வாழ்வியல் காட்சி ஓவியங்கள்!

சென்னை மாநகராட்சியின் மிக நீண்ட பாலமாக 2 கிலோ மீட்டர் நீளத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள இந்த பாலத்தில் தினசரி சராசரியாக 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் பயணித்து, சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன்பெறுவார்கள்.

சிங்காரச் சென்னையை நோக்கிய பயணத்தில் புதிய பெருமைமிகு அடையாளமாக புதிய தொழில்நுட்பத்தில் கட்டப்பட்டுள்ள இம்மேம்பாலத்தின் தடுப்புச் சுவர்களில் தியாகராய நகர் மற்றும் சுற்றுப்புறங்களின் வாழ்வியல் காட்சிகள் அழகிய ஓவியங்களாக சித்தரிக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் உழைப்பையும் மரபையும் சிறப்பிக்கின்றன.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.கருணாநிதி, த.வேலு, தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு வீட்டுவதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## கரூர் சோகம்: வன்முறையை தூண்டும்

# த.வெ.க.வினரின் உச்சக்கட்ட பொறுப்பற்ற பேச்சுக்கள்!

## அண்ணா அறிவாலயத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டியில் கண்டனம்!

**சென்னை, அக். 2 -**

**"கரூர் சம்பவம் குறித்து த.வெ.க.வினர் வன்முறையைத் தூண்டுவது போல பேசுவது பொறுப்பற்ற செயல்" என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கரூர் விவகாரம் தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் அளித்த பேட்டி வருமாறு:-

கரூரில் நடந்த சம்பவத்தில் 41 உயிர்கள் இறந்ததோடு பலர் தற்போதும் சிகிச்சையில் போராடிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழலை தான் பார்த்துக் கொண்டிருப்பதாகவும், எத்தனையோ குடும்பங்களில் தந்தை, குழந்தைகள், படித்து விட்டு எதிர்காலம் இருக்கும் என நினைத்த அடுத்த தலைமுறையினர் என பலர் உயிரிழந்து இருக்கிறார்கள், சின்ன சின்ன குழந்தைகளை இழந்து இருக்கிறார்கள் அந்த குடும்பத்தின் கண்ணீரும், கதறலும் இன்றும் மறக்க முடியாத ஒரு சூழல் தான் இருக்கிறது.

என்ன செய்தாலும் 10 நிமிடம் வெளியில் சென்று விட்டு வருகிறேன் என்று சொல்லி விட்டு சென்றவர்கள் திரும்பி வரவில்லை என்பது அவர்களின் எதிர்காலம் அவர்களுடைய குடும்பத்திற்கு என்ன ஆறுதல் சொல்ல முடியும் என்பது தெரியவில்லை. அந்தளவிற்கு ஒரு மோசமான சோகம்



தான் அங்கு உள்ளது. பல பேர் இன்னும் மருத்துவமனைகளில் அந்த காயத்தோடும் வலிகளோடும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

### முதல்வர் அறிவுறுத்தல்!

முதலமைச்சர் அன்று இரவே கரூர் சென்று நேரில் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார் மேலும் ஒரு தனி நபர் விசாரணையை கரூரில் என்ன நடந்தது என்பதை விசாரிப்பதற்காக நியமித்திருக்கிறார், அமைச்சர்கள் அதிகாரிகள் என அனைவரும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையாக இருக்க வேண்டும் என முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

அது மட்டுமின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணத் தொகையை அறிவித்து அதை கொடுக்கவும் செய்தார். இப்படிப்பட்ட ஒரு துயர சம்பவம் நடந்திருக்கக் கூடாது எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் கருத்தில் கொள்ள வேண்டும் என அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இது யாரையும் பழி சொல்லக் கூடிய நேரமோ அல்லது குற்றம் சுமத்தக்கூடிய நேரமோ இல்லை, சமூக வலைதளங்கள் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என பெருந்தன்மையோடு முதலமைச்சர் தெரிவித்துள்ளார். அதை அனைவரும் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அந்தக் குடும்பங்களின் ரணம் காயம் இன்னும் இருக்கக்கூடிய நிலையில் தவறான விசயத்தை சொல்லி மேலும் மேலும் வலிகளை உருவாக்கக் கூடாது.

### பாதிக்கப்பட்ட மக்களுடன் நின்றது தி.மு.க.!

பாதிக்கப்பட்ட மக்களோடு உடனடியாக நின்றது தி.மு.க.வும் தமிழக அரசும்தான். மனிதர்கள் மற்றும் மக்களுடைய உயிர் என்பது தான் முக்கியமான விஷயம்,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

## அரசு பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவிகித இட ஒதுக்கீடு அரசாணை வெளியீடு!

சென்னை, அக். 2 -

தமிழ்நாடு அரசு பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இந்நிலையில், இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசு நேற்று முன்தினம் அரசாணையை வெளியிட்டுள்ளது.

அதில், மாற்றுத்திறனாளிகள் பணிபுரிவதற்கான ஏற்ற பதவிகள் குறித்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. ஏ,பி,சி,டி என்று நான்கு நிலைகளிலும் 119 பதவிகள் மாற்றத்திறனாளிகளுக்கு ஏற்ற பதவிகள் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இயற்கை வளங்கள் துறையில் மேலாளர், துணை மேலாளர், அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ள நூலகங்களில் நூலகர் பணியிடங்கள், சட்டப்பேரவையில் உதவியாளர் பணியிடங்கள், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் கிடங்கு மேலாளர், துணை கிடங்கு மேலாளர் மற்றும் உதவியாளர்கள், போக்குவரத்துத்துறையில் நடத்துனர், ஓட்டுநர்,

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையில் சாலை ஆய்வாளர், உணவு பாதுகாப்புத்துறையில் உணவு பாதுகாப்பு அதிகாரி, தமிழ்நாடு எரிசக்தித்துறையில் மருத்துவ அதிகாரி, தட்டச்சர், அலுவலக உதவியாளர் என 119 பதவிகள் மாற்றுத்திறனாளிகள் பணிபுரிவதற்கான ஏற்ற பதவியிடங்கள் என்று அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.